Registered as a Newspaper

A/L 87
DAY CLASS
(Mon. - Fri)
CHEMISTRY
ஆசிரியர் திரு மக்ஸி
8-30 — 9-30
சேதன இரசாயனம்
9-30 — 10-30
பொது இரசாயனம்
New Master
INSTITUTE
B M.C. Lane, JAFFNA.

உதயன்

விலை: ரூ 1-25

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

A/L 87 DAY CLASS
[Mon. — Fri]
PHYSICS
ஆசிரியர்: திரு. R. சத்தியசீலன்
7-30 — 8-30
ஒலியியல்
ஆரம்பம்: 10-03-1987
8-30 — 9 30
சடப்பொருளின் இயல்புகள்
ஆரம்பம்: 05-03-87
New Master
INSTITUTE
B.M.C. Lane, JAFFNA.

கடல்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு மாசி மீ 11 உ திங்கட்கிழமை நித்ரி 1407 ஜமா ஆகிர் பிறை 24 (23-02-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 75

இனப்பிரச்சினை விடயம் இன்று லோக சபைக்கு

தமிழக அனைத்துக் கட்சிகள் குழு ராஜீவைச் சந்திக்கவும் ஏற்பாடு

புதுடில்லி, பெப். 23

இலங்கை இனப்பிரச்சினை விவகாரம் குறித்து, இந்திய லோக சபையில் (நாடாளுமன்றத்தில்) இன்று எதிர்க்கட்சிகள் பிரேரணை கொண்டு வந்து விவாதம் எழுப்ப உள்ளன.

இதே வேளை தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளையும் சேர்ந்த தூதுக் குழு ஒன்று விரைவில் புதுடில்லி வந்து பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்து இனப்பிரச்சினை சம்பந்தமாகப் பேச்சு நடத்த உள்ளது.

இதற்கிடையில் இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா மத்தியஸ்தர் நிலையிலிருந்து விலக வேண்டும் என்றும் தமிழகத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

இன்று (திங்கட்கிழமை) இந்திய லோக சபைக் (நாடாளுமன்றக்) கூட்டத்தொடர் ஆரம்பமாகிறது.

ஜனாதிபதி ஷெயில்சிங் கூட்டத் தொடரை ஆற்றுரையாற்றி ஆரம்பஞ் செய்து வைக்கிறார்.

நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் இலங்கைப் பிரச்சினை குறித்து விவாதம் எழுப்புவது என்று 12 எதிர்க்கட்சிகள் நேற்றுக் கூடி முடிவு எடுத்தன.

அவை விவாதம் எழுப்ப உள்ள ஏனைய விவகாரங்கள் வருமாறு:-

1. பஞ்சாப், 2. பாகிஸ்தான் எல்லைத் தகராறு, 3. கூர்க்காலந்து, 4. தபால்களை உடைத்

(4ஆம் பக்கம் பார்க்க)

லொறிக்காரர் மீது ஆனையிறவில் தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப் 23

யாழ்ப்பாணம் வருவதற்கென ஆனையிறவில் காத்துநின்ற லொறிச் சாரதிகள், கிளினர்கள் மீது சிப்பாய்கள் சனிக்கிழமை நள்ளிரவு தாக்குதல் நடத்தினர்.

கைகளாலும் துப்பாக்கி

(4 ஆம் பக்கம் பார்க்க)

வல்வை மீனவர் மீது படையினர் கொடூரம்

4 இயந்திரங்கள் மூழ்கடிப்பு

வல்வெட்டித்துறை, பெப். 23

வல்வைக் கடலில் நேற்றுக் காலை மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் கடற்படைப் பீரங்கிப் படகுகளில் வந்த சிப்பாய்களினால் பலமாகத் தாக்கப்பட்டனர்.

மீனவர்கள் கயிற்றினால் கட்டப்பட்டு கடலினுள் மூழ்கடிப்பட்டனர்.

சுமார் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான நான்கு மீன்பிடி இயந்திரங்கள் கடற்படையினரால் பறிக்கப்பட்டு கடலினுள் வீசப்பட்டன.

வீரயா, சூரயா பீரங்கிப் படகுகளில் வந்த கடற்படைச் சிப்பாய்களே இந்த அட்டூழியத்தில் நேற்று ஈடுபட்டனர்.

சிப்பாய்கள் முறுக்குக் கயிறுகளை வீசி சவுக்கினால் அடிப்பது போல் மீனவர்களைப் பல தடவைகள் அடித்தனர்.

வல்வெட்டித்துறை காட்டு வளவு என்னுமிடத்தைச் சேர்ந்த சிவகுமார் கஜேந்திரன் (வயது 20) பொன்னம்பலம் ரகுநாதன் (வயது 19) இன்பருட்டியைச் சேர்ந்த இராமசாமி குமாரகுரு (வயது 45) வடிவேலு யோகராஜா (வயது 25) செல்லக்கதிரமலை லிங்கதாஸ் (வயது 38) இராசமாணிக்கம் குமுதன் வேல் (வயது 29) ஆதி கோவிலடியைச் சேர்ந்த முத்துக்குமாரு ஞானரத்தினம் (வயது 28), இராமசாமி மனோகரதாஸ் (வயது 14) ஆகியோரே தாக்குதலுக்கு இலக்கானவர். (உ-160)

விக்ரரின் கல்லறை உடைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், பெப். 23

மன்னாரில் இம்மாதம் நடைபெற்ற அசம்பாவிதங்களின் போது இராணுவத்தினர், மறைந்த விடுதலைப் புலிகளின் மன்னார் தளபதி விக்ரரின் கல்லறையை உடைத்து அவரின் பூதவுடலிலிருந்து தலையை வெட்டி எடுத்துச் சென்றுள்ளனர்.

இத்தகவல் நேற்று நடைபெற்ற பிரசைகள் குழுக்களின் ஒன்றிணைப்புக்குழுக் கூட்டத்தில் மன்னார் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

மன்னார் ஆட்காட்டி வெளியிலுள்ள தளபதி விக்ரரின் கல்லறையை கிரேனேற்றி இராணுவத்தினர் உடைத்தனர்.

அதன்பின் அவரது தலையை வெட்டி எடுத்துக் கொண்டு சிப்பாய்கள் சென்று விட்டனர்.

– இவ்வாறு அவர் தெரிவித்தார். (உ – 5)

தமிழ் அகதிகளை மீளக் குடியேற்றுவதில் அரசின் குளறுபடி!

யாழ்ப்பாணம் பெப். 23

இடம் பெயர்ந்ததமது சொந்த இடங்களுக்கு மீளக்குடியேற விரும்பும் அகதிகளை மீளக்குடியேற அரசு அனுமதி மறுக்கிறது. அதேவேளை மீளக் குடியேற முடியாதுள்ள அகதிகளை மீளக்குடியேறும்படி அரசு நிர்ப்பந்திக்கிறது.

–இவ்வாறு பிரசைகள் குழுக்களின் ஒன்றிணைப்புக்குழு அமைப்பாளர் நாயகம் திரு. எஸ் சிவாஸந்தராஜா கூறினார்

நேற்று நல்லூர் இந்து விடுதியில் நடைபெற்ற ஒன்றிணைப்புக் குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இக்கூட்டம் குழுத்தலைவர் திரு. எம். அருமைநாயகம் தலைமையில் நடைபெற்றது

திரு. சிவானந்தராஜா மேலும் பேசுகையில் கூறியதாவது:-

கொக்கிளாய், நாயாறு பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த அகதிகள் மீளக் குடியேற விருப்பம் தெரிவித்திருக்கின்றனர் ஆனால் அவர்களை மீளக்குடியேற அரசு அனுமதிக்கவில்லை. அவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கி இங்கே தடுத்து வைத்துள்ளது.

இதற்குக் காரணம் அப்பகுதியில் சிங்கள மக்களை அரசு குடியேற்ற விரும்புவதே.

திருமலைப் பகுதிக்கு அகதிகள் மீளக்குடியேற அஞ்சுகின்றனர்; மறுக்கின்றனர்.

அரசோ அவர்களது நிவாரண உதவிகளை நிறுத்தி அவர்களை மீளக் குடியேற நிர்ப்பந்திக்கிறது-இப்படி அவர் கூறினார். (உ-5)

மண்ணெண்ணை விநியோகிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப். 23

மன்னார் மாவட்ட விவசாயிகளுக்கு மண்ணெண்ணை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மன்னார் அரச அதிபரும் இராணுவ இணைப்பதிகாரியும் இணைந்து இதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளனர்.

இன்படி மன்னார்

(4ஆம் பக்கம் பார்க்க)

தமிழக அனைத்துக் கட்சிகள் குழு ராஜீவைச் சந்திக்கவும் ஏற்பாடு

நாவற்குழியில் நேற்று சிப்பாய்கள் வெளியேற முயற்சி

ஷெல் தாக்குதலும் நடந்தது

கைதடி, பெப். 23

நாவற்குழி இராணுவ முகாமில் இருந்து நேற்று ஏவப்பட்டஷெல் குண்டுகள் சுமார் ஒன்றரை மைல்களுக்கு அப்பால் உள்ள கைதடிப்பகுதியில் முதல் தடவையாக விழுந்து வெடித்தன.

நேற்று நண்பகல் பன்னிரண்டு மணிமுதல் இந்த ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

நாவற்குழி இராணுவ முகாமில் இருந்து நேற்றுக்காலை 10 மணியளவில் நூற்றுக்கணக்கான சிப்பாய்கள் வெளியேற முயற்சித்தனர்.

இவர்களின் முயற்சியை முறியடிப்பதற்காக விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதல் நடத்தினர்.

முகாமுக்குத் திரும்பிய சிப்பாய்கள் அங்கிருந்து ஷெல் தாக்குதல்களை நடத்தினர்;

ஷெல் தாக்குதலினால் பல வீடுகளும், உடைமைகளும் சேதமடைந்தன.

ஷெல் தாக்குதலைத் தொடர்ந்து கைதடி மக்கள், கோப்பாய், மட்டுவில் பகுதிகளை நோக்கி இடம்பெயரத் தொடங்கினர்.

ஷெல் தாக்குதலினால் பாரிய சேதம் ஏற்படவில்லை.

நேற்று மாலைவரை ஷெல் தாக்குதல் தொடர்ந்து நடை

(4 ஆம் பக்கம் பார்க்க)

பனை, தென்னைகளில் ஏறுவதற்கு புதிய கருவி!

யாழ்ப்பாணம், பெப், 23

பனை, தென்னை, சமுகு போன்ற உயர்ந்த மரங்களில் ஏறுவதற்கான இயந்திரக் கருவி (பாம் கிளிம்பர்) ஒன்றை யாழ் ஆய்வு நிறுவனத்தினர் கண்டுபிடித்துள்ளனர்.

குடாநாட்டில் உள்ள பனைவளம், தென்னைவளம் போன்றவற்றை அபிவிருத்தி செய்வதற்காகவும், சமூதாய மாற்றங்களை ஏற்படுத்துவதற்காகவுமே இந்த இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பனை, தென்னை, சமுகு போன்ற மரங்களில் இதன் உதவியுடன் தொழிலாளி ஏறித் தனது தொழிலை இலகுவாகச் செய்ய முடியும்.

தெங்கு பனம்பொருள் கூட்டுறவு அபிவிருத்திச் சங்கம் இப்படியான ஒரு கருவியை யாழ்ப்பாணத்தில் கண்டுபிடித்தால் ஒரு லட்சம் ரூபா சன்மானமாக வழங்கும் என அண்மையில் அறிவித்திருந்தது தெரிந்ததே.

ஆய்வு நிறுவனத்தினர் இயந்திரமாதிரியையே செய்துள்ளனர். பண வசதி ஏற்படும் பட்சத்தில் அதனை ஒரு மாதத்துக்குள் முழுமையான இயந்திரமாக்கி மக்களின் பாவனைக்கு விட முடியும் என நிறுவனத்தைச் சேர்ந்த திரு. ச. வீ. துருவசங்கரி தெரிவித்தார். (உ-10)

சுபநேரம்

23—02—1987
திங்கட்கிழமை

சுபநேரம்:
12-31 முதல் 2-01 வரை

ராகுகாலம்:
8-01 முதல் 9-31 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

"நீங்க புலிக்கு உதவி புரியுறது; கெதியிலை உங்களை ஒழிப்போம்"

ஹெலியில் வந்தவர்கள் எச்சரிக்கை

வல்வெட்டித்துறை, பெப்.23

தாழப் பறந்துவந்த ஹெலிக் கொப்டரில் இருந்த விமானப்படையினர், மீன்பிடிப் படகு ஒன்றில் இருந்த மீனவர்களைப்பார்த்து "அடே நீங்கள் புலிகளா?" என்று கேட்டனர் சம்பவம் இன்பருட்டிக் கடலில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இது பற்றிய விவரம் வருமாறு:-

வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இன்பருட்டிக் கடலில் வை சிவசாமி, ந துரைசாமி, ந. ஆனந்தன் ஆகியோர் படகு ஒன்றில் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர்.

அச்சமயம் ஹெலிக் கொப்டர் ஒன்று அந்தப் பக்கம் தாழப் பறந்து வந்தது.

'ஹெலி'யில் இருந்த விமானப் படையினர் படகில் இருந்த மீனவரைப் பார்த்து "அடே, நீங்க புலிகளா?" என்று கேட்டனர்.

மிலி கொண்ட மீனவர்கள் கைகளை மேலே உயர்த்திய வண்ணம் "நாங்கள் மீனவர்கள்" என்று உரத்துக் கத்தினர்.

அதற்கு விமானப் படையினர்: "நீங்க போய் சொல்லுறது. இங்கு புலி நடமாடுது. நீங்க புலிக்கு உதவி புரியுறது. விரைவில் உங்களை ஒழிப்போம்" என்று எச்சரித்தனர்.

எச்சரிக்கையைக் கேட்ட மீனவர், மீன் பிடித்ததைத் தொடராமல் தப்பினோம், பிழைத்தோம் என்று கரை வந்து சேர்ந்தனர். (உ-எ-160)

அரசரங்க அதிபரும் அடகு வைத்தோர் பிரதிநிதிகளும் சந்திப்பு

யாழ்ப்பாணம், பெப் 23

மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைக்கப்பட்ட நகைகளை மீளக் கொடுப்பது சம்பந்தமாக அடகு வைத்தோர் சங்கப் பிரதிநிதிகளுடன் யாழ் அரசாங்க அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம் நேற்று மாலை பேச்சுவார்த்தை நடத்தினார்.

நகைகளை மீளக்கொடுப்பது சம்பந்தமாக கொழும்பில் அரசாங்க மட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து அவர் சங்கப் பிரதிநிதிகளிடம் விளக்கினார்.

நகைகளை வடக்கில் வைத்து மீளக் கொடுப்பதில் 80 சதவீத முன்னேற்றம் கண்டிருப்பதாகவும்-

தடைக்காரணங்கள் 20 வீதமே இருப்பதாகவும் அரச அதிபர் அப்போது எடுத்து விளக்கினார்.

வடக்கில் வைத்து நகைகளைக் கொடுப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் இணக்கம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்-அனுராதபுர பஸ் சேவை

யாழ்ப்பாணம், பெப். 23

இன்று திங்கட்கிழமை தொடக்கம் யாழ்ப்பாணத்திலிருந்து அனுராதபுரத்துக்கு பஸ் சேவை ஒன்றை வ. பி. போ. சபை நடத்த உள்ளது.

நாளாந்தம் காலை ஆறு மணிக்கு பிரஸ்தாப சேவை ஆரம்பமாகும். அதற்கான கட்டணம் முப்பத்திரண்டு ரூபாவாகும்.

இதேவேளை இன்று தொடக்கம் உள்ளூர் சேவைகள் யாவும் காலை, நண்பகல், மாலை ஆகிய மூன்று நேரங்களிலும் நடக்கும் என அறிவிக்கப்பட்டது (அ)

தீவிரவாதிகளுடன் இரகசியப் பேச்சா? அதற்கு யாழ்ப்பாணம் செல்லமுடியாதே!

அரபுப் பத்திரிகைக்கு ஜே. ஆர். பேட்டி

கொழும்பு, பெப். 23

யாழ்ப்பாணம் சென்று நாம் தீவிரவாதிகளைச் சந்திக்கமுடியாது; அவர்களுடன் பேசவும் முடியாது. அதனால் அவர்களுடன் பேச்சு நடத்தும் சாத்தியமில்லை.

ஜனாதிபதி திரு ஜெயவர்த்தனா முன்னாள் வாறு தெரிவித்தார்.

'அரபு நியூஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

பத்திரிகையின் நிர்வாக ஆசிரியர் பாரூக் லுக்மன் ஜனாதிபதியைப் பேட்டிகண்டார்.

பேட்டி வருமாறு:-

கேள்வி: இலங்கைநிலை எப்படி உள்ளது?

ஜே. ஆர்.: பாதுகாப்பைப் பொறுத்த வரையில் முன்னேற்றம் காணப்படுகிறது.

கேள்வி: இலங்கையில் தீவிரவாதம் காலூன்றி விட்டதாகத் தெரிகிறது.

ஜே ஆர்.: ஆம். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அப்படித்தான்.

கேள்வி: இலங்கைநிலை நன்றாக இருப்பதாகக் கூறுகிறீர்கள். நாட்டில் தேர்தல் நடத்த முடியுமா?

ஜே. ஆர்.: ஆம். வடக்கு, கிழக்கு தவிர இலங்கையின் ஏனைய பகுதிகளில் தேர்தல் நடத்த முடியும். வடக்கு, கிழக்கில் வேட்பாளர்கள் கொல்லப்படுவார்கள்.

கேள்வி: தீவிரவாதிகளுடன் நேரடியாகப் பேசுவதை உங்கள் அரசு எதிர்க்கிறது. பிலிப்பீன்ஸில் கம்யூனிஸ்ட்டுக்களுடன் இரகசியமாக நடத்தப்பட்ட பேச்சுக்கள்போல் நீங்கள் பேச முடியாதா?

ஜே ஆர்.: யாழ்ப்பாணம் சென்று தீவிரவாதிகளுடன் நாம் பேசமுடியாது. அதனால் நான் இந்தியா எமக்கு உதவி செய்கிறது. நடுநிலைமை யாளர்கள் சிலருடன் நாம் பேச்சுக்கள் நடத்தி இருந்தோம். அவர்கள் தீவிரவாதிகள் அல்லர்.

எம்முடன் பேச தீவிரவாதிகள் விரும்பாவிடின் நாம் அவர்களுடன் பேச முடியாது. எல்லைவு தூரம் ஒர் அரசு போக முடியுமோ அந்தளவு தூரம் நாம் போயுள்ளோம்.

கேள்வி: இந்தியாவின் நிலைபற்றி என்ன சொல்கிறீர்கள்?

ஜே ஆர்.: தீவிரவாதிகளுடன் அவர்கள் பேசுகிறார்கள்.

கேள்வி: இன்னும் இந்தியா உதவுகிறதா?

ஜே ஆர். ஆம். தமிழ் நாடு அரசுக்கு சில கருத்துக்கள் உள்ளன. புதுடில்லிக்கு எந்த அதிகாரமும் இல்லை என்று தோன்றுகிறது. (உ-எ)

குண்டு வீச்சு!

இயக்கச்சிப் பகுதியில்

கிளிநொச்சி, பெப்.23

புதுக்காடு, கிழக்கும், இயக்கச்சிக்கும் இடையில் உள்ள கறுக்காகுளம் பகுதியில் சனிக்கிழமை மாலை 6 மணியளவில் சுமார் அரை மணிநேரம் ஹெலிக் கொப்டர்கள் இரண்டானது தடவையாகக் குண்டுவீசக் நடத்தின. இதே பகுதியில் கடந்த புதன்கிழமை நண்பகல் ஹெலிக் கொப்டர்கள் தாக்குதல் நடத்தியது குறிப்பிடத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி மூளி

பகிரங்கமாய் பேச்சுக்கத் தயார் என்கிறபோது நிபந்தனை விதிக்கிறவர் இரகசியப் பேச்சென்றால் எல்லாத்தையும் விட்டுவிட்டே வருவார்... ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரங்கள்

விருப்புகள்

Computer Programming
றேடியோ, ரிவி றிப்பயறில், வயறில் ஆர்வமுள்ள 25-2-87 9-30 a. m.
Able Technical Studies
கே. கே. எஸ். வீதி, கல்லுமம்.

யாழ். மாவட்டத்தின் கல்வி நிலை

பெரும் பாதிப்பு

கல்வியதிகாரி விசனம்

யாழ்ப்பாணம், பெப் 23

யாழ் மாவட்டத்தின் கல்வி நிலை மிகவும் பின் தங்கியும், பெரும் பாதிப்புக்குள்ளாகியும் இருக்கிறது.

—இவ்வாறு யாழ் கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு கே. சந்தசாமி விசனம் தெரிவித்தார்

கல்லடைவேலி நெல்லியடி பல நோக்கு கூட்டுறவுச் சங்க கலாசார கூட்டுறவுப் பெருமன்றம் ஏற்பாடு செய்த விஞ்ஞானக் கல்வி விவரணத் திரைப்படக் காட்சி நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு அவர் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்,

இன்று பல பாடசாலைகளில் ரி. வி., டெக் என்பன இல்லை.

இப்படியான சூழ்நிலையில் கல்லடைவேலி, நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மாணவர்களுக்குப் பிரயோசனமான திரைப்படக் காட்சிகளை ஒழுங்கு செய்துவருவது பாராட்டுக்குரியது.

புனிதமிக்க ஆசிரியத் தொழிலை ஒரு சிலர் வியாபாரமாக்கியிருப்பது கவலைக்குரியது என்றார்.

இந்நிகழ்ச்சிகளுக்கு கலாசார கூட்டுறவுப் பெருமன்றத் தலைவர் திரு த. சிதம்பரப்பிள்ளை தலைமை வகித்தார்.

"வாழுங்கள் வாழ விடுங்கள்" என்ற தலைப்பிலான இத்திரைக் காட்சியைத் தயாரித்த திரு க. குகதாசன் திரு. வே. வீரராத்தினம், நெல்லி. க. பேரன், திரு. செ. யோகராசா திரு. கி. பவானந்தன், திரு. விக்கிநாதன், திரு. ஏ. ரகுநாதன், திரு ஐ. சண்முகன், திரு. செ. சதானந்தன் ஆகியோரும் உரையாற்றினர். (உ-5-70)

கொள்ளை

அம்பாறை, பெப் 23

அண்மையில் நிந்தவூரில் பெரும்பான்மை இனத்தவர் ஒருவருக்குச் சொந்தமான இயந்திர உதிரிப்பாகங்கள் தயாரிக்கும் பட்டறை ஒன்றுக்குள் ஆயுதபாணிகளாகப் புகுந்த மூன்று வாலிபர்கள் 25ஆயிரம் ரூபா பணத்தையும், வேறு சில உடுதுணிகளையும் அபகரித்துச் சென்றனர்.

நிந்தவூரில் தற்பொழுது ஊர்காவற் படையினரும் சேவை யாற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-14)

தொழுநோய்

குணமாக்கக் கூடியது

சுகாதாரக் கருத்தரங்கில் உரை

புங்குடுதீவு, பெப். 23

தொழுநோய்குணமாக்கக்கூடிய நோயாகும். இந்நோயால் பீடிக்கப் படுவோர் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சென்று சிகிச்சைபெற வேண்டும். மறைந்து வாழ்வதால் தங்களுக்கும் சமூகத்திற்கும் பெரும் தீங்கு விளைக்கிறார்கள். இதுவிடயத்தில் சுகாதாரத் தொண்டர்கள் மிக்க விழிப்புடன் செயலாற்ற வேண்டும்.

இவ்வாறு கூறினார் யாழ் மாவட்ட சுகாதாரக் கல்விப் போதனாசிரியர் திரு. கே. வைத்தீஸ்வரன்.

புங்குடுதீவு சேர். துரைச்சாமி வித்தியாலயத்தில் சுகாதாரக் கருத்தரங்கொன்று சமீபத்தில் நடைபெற்றது.

இக் கருத்தரங்கிற்குத் தலைமை வகித்து பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், புங்குடுதீவு மேற்கு வட்டாரப் பகுதியில் சொறி, சிரங்கு போன்ற நோய்கள் அதிகம் பரவி வருவதாகவும் மக்களின் கவனயீனமே இதற்குக் காரணமென்றும் கூறினார்.

ஐ. நா. தொண்டரும் 'மூலிகை' ஆசிரியருமான டாக்டர் வி. ரி. இளங்கோவன் பேசுகையில், சுகாதாரத் தொண்டர்கள் வீடுவீடாகச்சென்று நோயாளர்களைச் சந்தித்து உரிய சிகிச்சை பெற உதவுவதுடன் அடிப்படைச் சுகாதார அறிவினைப் புகட்டவும் முற்பட வேண்டுமென்றார்.

பிரதேச வித்தியாலய அதிபர் திரு. த. நகாலிங்கசிவம், சுகாதாரப் பரிசோதகர் ஏ. ஜோதிவர்மன், தொழுநோய்த் தடுப்பு உத்தியோகத்தர் திரு. எஸ். குணரத்தினம் ஆகியோரும் கருத்தரங்கில் உரையாற்றினர். (இ-113)

கிளிநொச்சியில் பாடசாலைகள் பாதிப்பு

கிளிநொச்சி, பெப். 23

கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளில் கடந்த 10-ம் திகதி முதல் ஏற்பட்ட பதற்றநிலை, இராணுவ நடமாட்டம் என்பன வற்றால் கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளிலுள்ள அரச கூட்டுத்தாபன அலுவலகங்கள் நிலைகுலைந்தன. பாடசாலைகள் மாணவர் வரவு இன்றி வெறிச்சோடியுள்ளன.

கிளிநொச்சி இராணுவ முகாமினையும், பரந்தன் இராணுவமுகாமினையும் அண்மித்துள்ள பிரதான பாடசாலைகளான கிளிநொச்சி மகா வித்தியாலயம், சென் திரேசா மகளிர் பாடசாலை, கனகபுரம் பாடசாலை, பரந்தன் இந்து மகாவித்தியாலயம் என்பனவே முற்றாக செயல் இழந்திருக்கின்றன,

இப்பாடசாலைகளைச் சூழவுள்ள பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தூர இடங்களுக்கு இடம் பெயர்ந்தமையும் - அவர்கள் தமது பிள்ளைகளை இப்பாடசாலைச் சூழலில் இராணுவ நடமாட்டக் காரணமாக பாடசாலைக்கு அனுப்ப அஞ்சுவதுமே மாணவர் வரவு முற்றாகத் தடைப்பட்டமைக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-76)

சம்பளப்பாக்கி இல்லை

பல ஆசிரியர்கள் ஏமாற்றம்

வட்டுக்கோட்டை, பெப் 23

யாழ் மாவட்டப் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்கள் பலர் 1986 ஆம் ஆண்டு தை மாதம் முதல் உயர்த்தப்பட்ட சம்பளத்திற்கான பாக்கிப்பணத்தை இம்மாதம் பெற்றுக்கொள்ளலாம் என எதிர்பார்த்திருந்து ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

எனினும் ஒருசில பாடசாலைகளின் ஆசிரியர்கள், அதிபர்களுக்கு இப் பாக்கிப் பணம் கிடைத்திருப்பது இன்று குறிப்பிடத்தக்கது.

அடுத்த சம்பளத்திலாவது இப்பாக்கிப்பணத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பல ஆசிரியர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர். (உ-161)

கிளிநொச்சிக்கு பத்திரிகை

விநியோகம் இல்லை

கிளிநொச்சி, செப் 23

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடந்த சில தினங்களாக பத்திரிகைகள் எதுவும் கிடைப்பதில்லை.

தபால், போக்குவரத்துச் சேவைகளும் சீர்குலைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-76)

விளையாட்டரங்கு

இல்ல விளையாட்டுப் போட்டிகள்

சுன்னாகத்தில்

சுன்னாகம், செப். 23

சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை பாடசாலை மட்டத்தினான வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி நாளை 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு அதிபர் திரு. மு. நாகேந்திரம் தலைமையில் நடைபெறும். (இ-27)

உபகொத்தணி மெய்வல்லுனர் போட்டி

வட்டுக்கோட்டை, செப். 23

வட்டுக்கோட்டை உப கொத்தணிப் பாடசாலைகளின் மெய்வல்லுனர் போட்டி வட்டுக் கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலை மைதானத்தில் நாளை 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1-30 மணி அளவில் நடைபெற உள்ளது.

யாழ். அபிவிருத்திச் சபையின் வட்டுக் கோட்டை உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. ந. குமாரசாமி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார்.

வட்டுக்கோட்டை கொத்தணிப் பாடசாலைகளின் நிர்வாக அதிபர் திரு. நா. வேலுப்பிள்ளை சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

வட்டு. திருஞானசம்பந்த வித்தியாசாலை, சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை, வட்டு மேற்கு அ. மி. த. க. பாடசாலை, துணவி அ. மி. த. க. பாடசாலை ஆகிய பாடசாலைகளின் மாணவர்கள் இப் போட்டியில் கலந்துகொள்கின்றனர். (இ-161)

நவாலியில்

மானிப்பாய், செப். 23

நவாலி மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் இம்மாதம் 25 ஆம் திகதி பிற்பகல் 2மணிக்கு அதிபர் திரு. செ கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெறும். (இ-90.

உடுவிலில்

மானிப்பாய், செப். 23

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் நாளை 24ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் திரு. வை. யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறும். (இ-90)

இணுவிலில்

மானிப்பாய், செப். 23

இணுவில் சைவ மகாஜன மகா வித்தியாலய இல்லவிளையாட்டுப் போட்டிகள் இம் மாதம் 25ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். (இ-90)

மட்டுவிலில்

சாவகச்சேரி, செப். 23

மட்டுவில் சந்திரபரஸ்கந்தவரோதயமகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் இம் மாதம் 25ஆம் திகதி புதன் கிழமையன்று நடைபெற விருக்கின்றது (இ-31)

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

சமகால நிகழ்வுகளை

எழுத்தாளர் தமது ஆக்கங்களில் சேர்த்துக் கொள்ள வேண்டும்

'சத்தியங்கள்' அறிமுக விழாவில் உரை

யாழ்ப்பாணம், பெப்.23

சமகால நிகழ்வுகளை எழுத்தாளர்கள் தமது ஆக்கங்களில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

யாழ் மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் இவ்வாறு கூறினார்.

நெல்லை க. பேரன் எழுதிய சத்தியங்கள் சிறுகதைத் தொகுதி அறிமுகவிழா சனிக்கிழமை நல்லூர் இந்து விடுதியில் நடைபெற்றது.

ஆணையாளர் மேலும் பேசுகையில்; இந்திய பரந்த உலகம் எழுத்தாளர்களை வரவேற்கிறது. இங்கே அப்படியல்ல. எழுத்தாளர்கள் தமது படைப்புக்களை சுவிற்க வேண்டிய நிலையில் உள்ளனர் என்றார்.

கலாநிதி இரா. பாலசுந்தரம் தமது தலைமையுரையில்,

நெல்லை க. பேரன் எழுத்தில் மட்டுமல்ல வாழ்க்கையிலும் முற்போக்கானவர் என்றார்.

திருமதி கோகிலா மகேந்திரன் தமது அறிமுகவுரையில், சமுதாயம் முன்னேற தூண்டுதலாக அமையும் எழுத்துக்களே முற்போக்கு எழுத்துக்கள் என்றார்.

கலாநிதிசோ. கிருஷ்ணராஜா, கலாநிதி பார்வதி கந்தசாமி, திரு. சோ. பத்மநாதன், கலாநிதி நா. சுப்பிரமணியன் ஆகியோர் ஆய்வுரைகள் வழங்கினர்.

முதற் பிரதியை திரு. சி. குணசிங்கம் பெற்றுக் கொண்டார்.

திரு. பூ. ஸ்ரீதரசிங், திரு. எஸ். வி. தியாகராஜன், திரு. இ. அருட்செல்வம் சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர்.

திரு க. சிவபாலன் வரவேற்புரையும், திரு. சி. வெற்றிவேலு நன்றியுரையும் வழங்கினர்.

யாழ் அஞ்சல் திணைக்கள இலக்கிய நண்பர் சமாஜம் விழாவை ஒழுங்கு செய்திருந்தது. (இ-5)

மக்கள் முகம்

கலைவாணி சனசமூக நிலையம்

யாழ்ப்பாணம், செப்.23

நாவாந்துறை கலைவாணி சனசமூக நிலைய ஆண்டுப் பொதுக் கூட்டம் அண்மையில் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

நிர்வாக செயலாளர் திரு. எஸ். அருணகிரிராசா மற்றும் உடுப்பிட்டி, பருத்தித்துறை தொகுதிக் கிளை நிர்வாகிகள் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

ஆசிரியர் சங்கத் தூதுக்குழு கோட்டக் கல்வி அலுவலக பொறுப்பதிகாரி திரு.வி. தங்கராசா மற்றும் கல்வி அதிகாரிகளைச் சந்தித்துஉடுப்பிட்டி, பருத்தித்துறை வட்டாரப் பாடசாலை ஆசிரியர்களின் தேவைகள் குறைபாடுகள் பற்றி பேச்சுவார்த்தை நடத்தியது. (இ-11)

சாரணர் இயக்கம்

சமூகத்திற்குவழிகாட்டி

சின்னம் சூட்டும் விழாவில் உரை

யாழ்ப்பாணம், பெப் 23

சாரணர் இயக்கம் மாணவர்களுக்கு நல்ல வழிகாட்டியாக அமைகின்றது. சமூகத்தில் உயரிய பிரசைகளாக அவர்களை மிளிர வைக்கின்றது.

இளவாலை செண்ட். ஹென்றீஸ் கல்லூரியில் புதிதாகச் சேர்ந்த ஐம்பது சாரணர்களுக்குச் சின்னம் சூட்டும் விழாவில் கலந்து கொண்ட கல்லூரி அதிபர் வண. அன்ரன் இராசநாயகம் அடிகள் இவ்வாறு தெரிவித்தார்.

செல்வன் விஜயகுமாரன் தலைமையில் நடைபெற்ற சின்னம் சூட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மாவட்ட ஆணையாளர் திரு நா. போஜன் சாரணருக்கான சின்னங் களைச் சூட்டினார்.

உதவி சாரண ஆணையாளர் திரு ரவி, உதவி குருளையர் ஆணையாளர் செல்வி சரோஜினி பரம தேவராஜா ஆகியோரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

காங்கேசன்துறை சாரணர் சங்கம் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் நடத்திய பேடன்பவல் நினைவுதினப் போட்டியில் இளவாலை செண் ஹென்றீஸ் கல்லூரி பிள்ளைகளும் இடங்களைப் பெற்றது

கோலாகலம்; 1ஆவது இடம்.

பேச்சு; செல்வன் எஸ் ஜெயசிறி- 1ஆவது இடம் ஏ வியலுட்ரதீன்- 2ஆம் இடம்.

குழுப்பாடல்: இரண்டாம் இடம். (இ)

பிரயாண ஒழுங்குகள்

Horizon Enterprises

OPEN VISAS

● ஓமான் ● குவைத் ● சவூதி

உடன் வேலை வாய்ப்பு!

நாம் குறிப்பிடப்படியே உங்களது பயணத்திற்கான ஒழுங்குகள் செய்துதரப்படும்.

அன்றும், இன்றும் என்றும் எதுவித முரண்பாடுமில்லாது ஒன்பதாவது ஆண்டையும் பூர்த்திசெய்தும் தொடர்ந்தும் கண்ணியமாய் எமது முகவர் நிலையம் வடபகுதியில் முன்னோடியாய் இயங்கிக்கொண்டிருக்கின்றது என்பதனையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

✶ எமக்கு வடபகுதியில் வேறு கிளைகள் கிடையாது

பணிப்பெண்களுக்கான பிரயாண ஒழுங்குகள்

மிகவிரைவில் குறைந்த கட்டணத்தில் செய்து தரப்படும்.

லெபனான், அபுதாபி, சிங்கப்பூர், டுபாய் ஆகிய நாடுகளுக்கு

காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை நேரில் தொடர்பு கொள்ளவும்.

கடிதம் மூலம் தொடர்பு கொள்வோர் முத்திரை ஒட்டிய கவருடன் தொடர்பு கொள்ளவும். எமது முகவர் நிலையத்தினூடாக பயணம் மேற்கொண்டோர் விபரம் வாரந்தோறும் வெளியிடுகின்றோம்.

இவ்வாரம் பயணம் மேற்கொள்வோர் பெயர் விபரங்களை அடுத்தவாரம் பத்திரிகையில் காணலாம்.

உங்கள் (PASSPORT)

கடவுச் சீட்டுக்கள் குறித்த தவணையில் குறைந்த செலவிற் செய்து தரப்படும்.

எம்மிடம் (PASSPORT) கிடைக்கப்பட்டவும் எல்லா நாட்டிற்கான சகலவிதமான

முத்திரைகளும்

மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ் முகவரி:
A. பத்மதாஸ்
மதுரா விடியோ கிளப்,
இல. 96, 4-ம் குறுக்குத் தெரு,
சின்னக்கடை, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 23549

கொழும்பு முகவரி:
HORIZON ENTERPRISES
No 87 2/1, Kollupittiya Lane,
Kollupittiya, COLOMBO-3.
T-phone: 574000

யாழ் இணைப்பதிகாரி மூலம் வவுனியா இணைப்பதிகாரிக்கு விண்ணப்பிக்க வேண்டுமாம்

யாழ்ப்பாணம், பெப் 23

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு டீசல் தேவையானால் வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் யாழ் மாவட்ட இணைப்பதிகாரி ஜெரிடி சிவ்வா மூலமாக எனக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

இவ்வாறு வவுனியா மாவட்ட இணைப்பதிகாரி கொப்பேகடுவ தெரிவித்தார்

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு டீசல் எடுத்து வருவதற்காக வவுனியா சென்ற வடபிராந்திய போக்குவரத்துச் சபை உயரதிகாரிகளிடம் கொப்பேகடுவ இவ்வாறு சொன்னார்.

அவர் மேலும் சொன்னதாவது;

வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மகுதிகள் எனக்கு கீழ் இயங்குகின்றன.

யாழ்ப்பாணம் ஜெரிடி சிவ்வாவிற்குக் கீழ் இயங்குவதால் அவர் தான் சிபார்சு செய்ய வேண்டும்- இப்படி அவர் தெரிவித்தார்.

இதனை அடுத்து வடபிராந்திய போக்குவரத்துச் சபை உயரதிகாரிகள் சனியன்று பலாலி முகாமுக்குச் சென்று தமது விண்ணப்பங்களை கையளித்தனர்.

எனினும் ஜெரிடி சிவ்வா அங்கு இருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

சுருக்கெழுத்து வகுப்பு

உடுப்பிட்டி, பெப். 23

1987 ஆம் ஆண்டிற்கான சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்புகள் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வடமராட்சி சுருக்கெழுத்துச் சமாஜம் நடத்தும் இப்பயிற்சி வகுப்புகள் மார்ச்மாதம் முதலாம் திகதியும், ஏழாம் திகதியும் ஆரம்பமாகவுள்ளன.

சனி, ஞாயிறு ஆகிய விடுமுறை தினங்களில் பிற்பகல் மூன்று மணி தொடக்கம் ஐந்து மணி வரையும் வகுப்புகள் நடைபெறும். தமிழ்ப் பிரிவுப் பயிற்சி நெறி மார்ச் முதலாம் திகதி ஆரம்பமாகும்.

ஆங்கில மொழி மூலமான சுருக்கெழுத்துப் பயிற்சி நெறி மார்ச் ஏழாம் திகதி ஆரம்பமாகும். (இ-157)

நெல்லியடி அலுவலக அதிகாரிகளுக்குப் பாராட்டு

அச்சுவேலி, பெப். 23

ஆசிரியர்களின் சகல குறைபாடுகளையும் குறுகிய காலத்தில் நிவர்த்தி செய்து பாடசாலை நிர்வாகம் சிறப்பாக நடைபெறுவதற்கு நெல்லியடி கோட்டக் கல்வி அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ள முறை பாராட்டத்தக்கது.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க தூதுக்குழு நெல்லியடி கோட்டக் கல்வி அலுவலக நிர்வாகிகளை நேரில் சந்தித்து மேற்கண்டவாறு பாராட்டுத் தெரிவித்தது.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் திரு த. மகாலிங்கம் தலைமையில் சென்ற தூதுக்குழுவில் நிர்வாகச் செயலாளர் திரு. எஸ். அருணகிரிராசா மற்றும் உடுப்பிட்டி, பருத்தித்துறை தொகுதிக் கிளை நிர்வாகிகள் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

ஆசிரியர் சங்கத் தூதுக்குழு கோட்டக் கல்வி அலுவலக பொறுப்பதிகாரி திரு.வி. தங்கராசா மற்றும் கல்வி அதிகாரிகளைச் சந்தித்துஉடுப்பிட்டி, பருத்தித்துறை வட்டாரப் பாடசாலை ஆசிரியர்களின் தேவைகள் குறைபாடுகள் பற்றி பேச்சுவார்த்தை நடத்தியது. (இ-11)

முக்கிய அறிவித்தல்

ஹோட்டல் ஞானம்ஸ்

கடந்த ஆவி மாதத்திலிருந்து ஹோட்டல் ஞானம்ஸ்லை நடத்தி வந்த முகாமைத்துவம் நீக்கப்பட்டு மீண்டும் உரிமையானரான பழைய முகாமைத்துவமே நிர்வாகத்தை 15-2-87 இல் இருந்து பொறுப்பேற்றுள்ளதென்பதை வாடிக்கையாளர்கள், நண்பர்கள், பொதுமக்கள் யாவருக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். இன்றைய இக்கட்டான சூழ்நிலையின் மத்தியிலும் மக்களின் பொருளாதார நெருக்கடிகளை மனதிற்கொண்டு தரத்திலும், சுவையிலும் குறைந்த விலையில் சிறந்த உணவு வகைகளைத் தருவதுடன் CHINESE WESTERN, EASTERN உணவுவகைகளை உடனுக்குடனும் ஆடருக்கும் வழங்க முன்வந்துள்ளோம்.

தரம், சுவை,
இனிய உபசரிப்பு
குறைந்த விலை உணவுகளுக்கு

HOTEL GNANAMS
299, Clock Tower Road,
JAFFNA.
BEER GARDEN
Beer With Omelette
Rs. 33/-
T. No. 22082

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

எப்போதும் மனத்தை நோக்கி "மனமே! அடக்கமாவிரு"— என்று சொல். பிறரைப் பற்றி அறிய ஆவல் கொள்ளாதே.

— அன்னை சாரதாதேவி.

உதயன்

இல.15,3 குமுதஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 23-02-1987 த.பெ.இல. 88

புலிகளும் அமிரும்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கத்துக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தண்டனை விதித்து விட்டார்கள்!

இப்படி ஒரு செய்தி கடந்த வாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. கொழும்புப் பத்திரிகைகள், சென்னைப் பத்திரிகைகள், வெளிநாட்டு வானொலிகள் மற்றும் தகவல் தொடர்பு ஸ்தாபனங்களில் இந்தச் செய்திக்குப் பெரும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது.

இது இலங்கை அரசின் பெரும் அரசியல் சதியாக இருக்க வேண்டும் என்று ஏற்கனவே ஊகிக்கப்பட்டது. ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு குழப்ப நிலையை உண்டாக்கி, ஒரு மயக்க நிலையை உருவாக்கி அவர்களைப் பிளவுபட வைக்கும் தந்திரமே இதுவாகும். தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பகைமை உணர்ச்சியை உண்டாக்கி மக்கள் மத்தியில் புலிகளுக்கு உள்ள ஆதரவைக் குன்றச் செய்வது அந்தச் செய்தியின் பிரதான நோக்கமாகும்.

விடுதலை அமைப்புகள் மத்தியில் பகையை வளர்க்க எப்படி லங்காபுவத்தும் கொழும்புப் பத்திரிகைகளும் முயன்றன என்பது தெரிந்த விடயம்.

தமிழ் மக்கள் மத்தியில் "உள்வீட்டுப்" பிளவை உண்டாக்கி அதன் மூலம் தனக்கு அரசியல் லாபம் தேடக் கொழும்பு அரசு முயல்வது ஒன்றும் புதிதல்ல. இராணுவ, பொருளாதார நெருக்குதல்களால் குனிக்க முடியாத தமிழ் மக்களின் சுதந்திர உணர்வை இப்படியாவது குனித்துப் பார்ப்போம் என்று முயற்சிக்கிறது.

இது குறித்துத் தமிழ் மக்களும், தமிழர் விடுதலை அமைப்புகளும் வெகு அவதானமாக இருக்க வேண்டும். எதிரியின் இராணுவ நெருக்குதலைவிட, "உள்வீட்டுப் போர்" மிக மிக ஆபத்தானது. எதிரி வந்து அழிப்பதற்கு முன் நாம்மைத் தாமே தமிழர்கள் அழிக்க அது வகை செய்து விடலாம்.

எனவே இந்த விடயத்தில் அரசு வெற்றி காண்பதற்குத் தமிழ்ப் போராளிகளோ அல்லது தமிழர் விடுதலைக் கூட்டணியினரோ அல்லது தமிழ் மக்களோ இடம் கொடுத்து விடலாகாது.

இந்த வகையில் மரண தண்டனைச் செய்திக்கும் தமது இயக்கத்துக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று புலிகள் பேச்சாளர் திரு கிட்டு அறிவித்திருப்பது மகிழ்ச்சி தருவதாகும். நிலைமையை மேலும் தெளிவுபடுத்தும் விதத்தில், திரு. அமிர்தலிங்கம் யாழ்ப்பாணம் வருவதாலும் நமக்குப் பிரச்சினையல்ல என்றும், அவர் அவ்வாறு செய்தால் கவலையும் இல்லை என்பதும் திரு. கிட்டு கூறியிருக்கிறார்.

தமிழ் மக்கள் மத்தியில் உரிமை உணர்வை விதைத்த பெருமை தந்தை செல்வநாயகத்துக்கு உண்டு. அதனை மக்கள் மத்தியில் வளர்த்து எடுத்ததில் திரு. அமிர்தலிங்கத்துக்குப் பெரும் பங்குண்டு. அதே வகையில் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் பெரும் பங்கைத் தமிழ்ப் போராளிகள் செய்து வருகிறார்கள் என்பதும் பேருண்மை.

போராளிகளின் தியாகத்தால் தான் அரசாங்கம் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும் அளவுக்கு படியிறங்கி வந்திருக்கிறது என்பதும் உலகம் அறிந்த உண்மை. அவர்களால் தான் தமிழர் பிரச்சினை சர்வதேச மயப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதும் மறுக்க முடியாத உண்மை.

இந்நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் 1983 இன் பின்னர் சொந்த மண்ணில் வசிக்காமல் தமிழகத்தில் அஞ்ஞாத வாசம் செய்வது அவர்கள் விட்ட மாபெரும் தவறு. இராணுவ அட்டூழியங்களுக்குப் பயந்து தான் அவ்வாறு செய்தார்கள் என்று சொன்னால் ஏற்றுக் கொள்ளக் கூறுவது ஏற்கத்தக்கதல்ல. இங்குள்ள மக்களின் உயிர்களை விடத் தமது உயிர்களே பெறுமதியானவை என்று அவர்கள் கருதினார்கள் என்பதே அதற்குரிய தர்க்க வாதம்.

இந்தச் சூழ்நிலையில் மக்களோடு மக்களாக நின்று, மக்களைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபடும் போராளிகளை மக்கள் ஆதரிப்பது இயற்கையே.

இதன் விளைவாக போராளிகளை மக்களின் பிரதிநிதிகளாக மாறியதிலும் வியப்பில்லை. ஆனால் தங்களுக்கு மக்கள் ஆதரவு உண்டு என்பதற்காக, முந்திய பரம்பரைத் தலைவர்களைத் தண்டிக்க வேண்டும் என்ற எண்ணம் போராளிகளுக்கு இருக்கக் கூடாது.

அவ்வாறு செய்யத் துணியின் அதே கதி இன்னொரு காலத்தில் தங்களுக்கும் ஏற்படக் கூடும் என்பதை அவர்கள் உணரத் தவறக் கூடாது. பல நாடுகளில் அப்படியான தரிஷ்டம் ஏற்பட்டதைப் போராளிகளே உணர்வார்கள் என நம்புகிறோம்.

'யார் குற்றியும் அரிசியாகட்டும்' என்ற கொள்கையைத் தாம் கடைப்பிடித்து வருவதாக அமிர்தலிங்கம் அண்மையில் கூறியிருந்தார். அதே நிலையை அவர் கடைப்பிடித்துக் கொண்டு போராளிகளுக்கு விட்டுக் கொடுப்பதே நல்லது.

மக்கள் சக்தி தம்மோடு இருக்கும் போது கூட்டணியைப் பற்றியோ அல்லது அதன் தலைவர்களைப் பற்றியோ போராளிகள் கவலைப்பட வேண்டியதில்லை அல்லவா?.

வெளி உலகில்

தென்ஆபிரிக்காமீதான ஐ.நா. விவாதம் முடிவு

வாஷிங்டன், பெப் 22
தென் ஆபிரிக்காவில் இடம் பெற்று வரும் இனக்கலவரங்கள் பற்றி கடந்த நான்கு நாட்களாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் நடைபெற்ற விவாதம் நேற்று முடிவடைந்தது.

கட்டாய பொருளாதாரத் தடையை எதிர்த்து அமெரிக்கா, பிரிட்டன், மேற்கு ஜேர்மனி ஆகிய நாடுகள் வாக்களித்தன

பிரான்ஸும் ஜப்பானும் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

15 நாடுகள் அங்கம் வகிக்கும் பாதுகாப்புச் சபையில் சீனா, ரஷ்யா, இந்தாவி உட்பட பல மேற்கு நாடுகள் ஆதரவாக வாக்களித்தன

கட்டாய பொருளாதாரத் தடைக்கான இந்தப் பிரேரணை நிறைவேறியிருந்தால் தென் ஆபிரிக்காவிலிருந்து ராணுவ உபகரணங்கள், சீனி, இரும்பு, நிலக்கரி, யூரேனியம் ஆகியவற்றின் இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கும்.

அதே சமயம் தென் ஆபிரிக்காவிற்கு கம்யூட்டர்கள், மசகு எண்ணெய், பெற்றோலியப் பொருள்கள் ஆகியவற்றின் ஏற்றுமதிக்கும் தடை கொண்டு வரப்பட்டிருக்கும்.

அத்துடன் விமானத் தொடர்புகளை தென் ஆபிரிக்காவுடன் துண்டிப்பதற்கும் இது வழி வகுத்திருக்கும். (ஒ)

பங்களாதேஷில் ஆர்ப்பாட்டம்

டாக்கா, பெப்.22
பங்களாதேஷில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் சுமார் 240 பேர் பலியானார். பலர் காயமடைந்தனர்.

இரண்டு எதிர்க்கட்சி ஆதரவாளர்களிடையே இம்மோதல் இடம்பெற்றது

டாக்கா பல்கலைக்கழக மாணவர்கள் ஊர்வலமாகச் சென்று கொண்டிருக்கையில் வன்செயல்கள் ஆரம்பித்தன. (ஒ)

எச்சரிக்கை

மாஸ்கோ, பெப் 22
ரஷ்யாவின் சீர்திருத்தச் சட்டங்களை எதிர்ப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு ரஷ்ய அதிபர் மிக்கையில் கோர்பச்சேவ் எச்சரிக்கை விடுத்தார்.

சீர்திருத்தங்கள் பற்றி விவாதிப்பதை நிறுத்தி அவற்றைச் செயல்படுத்துவதற்கான காலம்வந்து விட்டதாக அவர் சேலும் தெரிவித்தார். (ஒ)

பேச்சுச் சுதந்திரம் பிரதிபலித்த இடத்தில் பேசுவதற்குத் தடை

லண்டன், பெப். 22
லண்டன் மாநகரில் உள்ள ட்ராபல்கர் சதுக்கத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு பொதுக்கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்களை நடத்த முடியாது.

பிரிட்டிஷ் அரசு வெள்ளிமுதல் இத்தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

ட்ராபல்கர் சதுக்கத்தை நவீனமயமாக்கு வதே இதற்குக் காரணம் என்று பிரிட்டிஷ் அரசு அறிவித்துள்ளது.

ஜனவரி முதலாம் திகதி (ஆங்கில புதுவருடப்பிறப்பு) அன்று மட்டும் இச்சதுக்கத்தில் வைபவங்கள் நடத்தலாம்

இத்தடை உத்தரவு பேச்சுச் சுதந்திரத்தின் பிரதமர் தட்சர் தலையிடுவதையே எடுத்துக் காட்டுவதாக தொழிற்கட்சி பலத்த கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

ட்ராபல்கர் சதுக்கம் உலகில் பிரபலமான இடம். எவரும் இச்சதுக்கத்தில் கூடிடம் நடத்தலாம். ஆர்ப்பாட்டம் நடத்தலாம். அதற்கு அனுமதி தேவை இல்லை.

பேச்சுச் சுதந்திரத்தை பிரதிபலிக்கும் இடமாக ட்ராபல்கர் சதுக்கம் இதுவரை விளங்கி வந்தது. (ஒ-எ)

பயங்கரவாதத்தை முறியடிக்கும் போர்வையில்

பண ஆதிக்கத்தை நிலைநிறுத்த றேகன் செய்த இரகசியமுயற்சி

பத்திரிகை அம்பலப்படுத்தியது

வாஷிங்டன், பெப் 22
உலகில் பல நாடுகளில் குறிப்பாக சிறிய நாடுகளில் பயங்கரவாதத்தைத் தடுப்பது என்ற போர்வையில் அமெரிக்கா தனது கேந்திர நிலையங்களை அந்த இடங்களில் நிறுவுவதற்கும் பண ஆதிக்கத்தை நிலை நிறுத்தவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மத்திய புலனாய்வுப் பிரிவிற்கு (சி. ஐ. ஏ. க்கு.) றோன் அனுமதி வழங்கி இருந்தார்.

அமெரிக்க அரசாங்கமற்றும் உளவறியும் அதிகாரிகளின் கூற்றுக்களை மேற்கோள்காட்டி இச்செய்தி வெளியிடப்பட்டது

1985ஆம் ஆண்டு ஜூலை மாதம் ரி டபிள்யு. ஏ. ஜெட் விமானம் ஒன்றை பெய்ரூட்டிற்குக் கடத்தியவர்களைக் கண்டு பிடிப்பதற்கு எடுத்த முயற்சிகள் பலனளிக்காததால் றேகன் இந்த அதிகாரத்தை 1986ஆம் ஆண்டு ஜனவரி மாதம் றோன் அனுமதி வழங்கி இருந்தார்.

இத்திட்டங்கள் செய்தியை "வால்ஸ்ட்ரீட் ஜர்னல்" என்ற பத்திரிகை வெளியிட்டுள்ளது.

வெளி நாடுகளில் இயங்கும் பயங்கரவாதிகளைக் கடந்த வருடத்தில் தாக்குவதற்கும் அவர்களை விசாரணைக்காக அமெரிக்காவிற்கு கடத்திவருவதற்கும் கூட மத்திய உளவறியும் பிரிவுக்கு ஜனாதிபதி திரு.

TYPEWRITERS
SALES – SERVICE
FUDO ENTERPRISES
JAFFNA ROAD – MANIPAY.

உதயன்

23 - 02 - 1987 திங்கட்கிழமை

TYPEWRITERS
தமிழ்ச்சு இயந்திரங்கள்
சிறந்த முறையில், உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்
FUDO ENTERPRISES
JAFFNA ROAD – MANIPAY.
(Near Bank of Ceylon – Bitsman)

★ 12 பேர் பலி ★ 126 பேர் கைது
★ 200 கடைகள், வீடுகள் நாசம்

மன்னாரில் பேரழிவு;

மாதமுற்பகுதிச் சம்பவங்களினால்!

யாழ்ப்பாணம், பெப். 23

இம்மாதம் முற்பகுதியில் மன்னாரில் இடம் பெற்ற இராணுவ அசம்பாவிதங்களில் 11 பொதுமக்கள் பலியாகியுள்ளனர்.

126பேர்வரை கைதாகி பூஸா முகாம் அனுப்பப்பட்டுள்ளனர்.

பண்டிவிரிச்சான்இலுப்பைக்கடவையில் சுமார் 200 கடைகள், வீடுகள் எரியன எரிக்கப்பட்டும் தகர்க்கப்பட்டும் உள்ளன.

அடம்பன் ஆஞ்சநேயர், அடம்பன் உதவிஅரசாங்க அதிபர் அலுவலகம், நெல் சந்தைப்படுத்தும் களஞ்சியம், வட்டக்கண்டலிலுள்ள நாங்கு அரிசி ஆலைகள் என்பன தகர்க்கப்பட்டுள்ளன.

—நேற்று நடைபெற்ற பிரசைகள் குழுக்களின் ஒன்றிணைப்புக்குழுக் கூட்டத்தில் வைத்து மன்னார் பிரசைகள் குழுச் செயலாளர் இந்தவல்களை வெளியிட்டார்.

மடுவில் 22 பேரும் திருக்கேதீஸ்வரத்தில் 44 பேரும், விடத்தல் தீவில் 60 பேரும் சிப்பாய்களால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சங்குப்பிட்டி விதியிலுள்ள மன்னார் நகரம், கறிச்சட்டிப்பாலம், தள்ளாடி, அடம்பன், பள்ளமடு, இலுப்பைக்கடவை ஆகிய இடங்களிலும் –

வவுனியா விதியிலுள்ள உயிலங்குளம், முருங்கன், பறையனாளங்குளம் ஆகிய இடங்களிலும் –

மடு – தம்பனைக்கிடையில் உள்ள காட்டுப்பகுதிகளிலும்–சுமார் 5ஆயிரம் சிப்பாய்கள் தற்போது பரந்து தங்கியுள்ளனர்.

இதனால் இப்பகுதிப் பொதுமக்கள் வெளியே வர முடியாத நிலையில் உள்ளனர்.

வீடுகளை இழந்துள்ள பலர் மடுக்கோயிலில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

– இவ்வாறு அவர் தெரிவித்தார். (உ–5)

லொறிச் சாரதி மீது சூடு!

யாழ்ப்பாணம், பெப். 23

ஆனைறிறவில் லொறிச் சாரதி மீது சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் அவர் படுகாயமடைந்தார்.

சனிக்கிழமை இரவு 9 மணி அளவில் இச்சம்பவம் நடைபெற்றது.

வேலணையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை தர்மராசா (45 வயது) என்பவரே காயமடைந்தவராவர். (உ–10)

மருத்தித்துறையில் வெள்ளியன்று நடந்த ஷெல் தாக்குதல்கள்

வல்வெட்டித்துறை, பெப். 23

மருத்தித்துறை இராணுவ முகாமில் இருந்து கடந்த வெள்ளிக்கிழமை இரவு 8 மணியளவில் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது

ஷெல் ஒன்று வியாபாரமூலை பகுதியில் உள்ள புலிகளின் பாதுகாப்பு அரணின்அருகில் விழுந்து வெடித்தது.

இதனால் வியாபாரி மூலை வட்டாரமே அதிர்ந்தது. பாரிய கிடங்கு ஒன்று அந்த இடத்தில் ஏற்படிருந்தாலும் வேறு பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை.

நேற்றுக்காலை புலிகளின் பாதுகாப்பு அரண் மேலாக வேவு விமானம் ஒன்று வட்டமிட்டுச் சென்றது. வேறு அசம்பாவிதங்கள் எதுவும் இடம் பெறவில்லை. (உ-எ-160)

லொறி...

(1–ம் பக்கத்தொடர்ச்சி)

மிக காத்து நின்றன.

திடீரென ரயில் தண்டவாளம் வழியே வந்த சிப்பாய்கள் இவர்கள்மீது தாக்குதல் நடத்தினர்.

சில லொறிகளின் சன்னலிகளும் சேதப்படுத்தப்பட்டன. (உ–10)

அரசாங்க. . .

(1ஆம் பக்க தொடர்ச்சி)

தெரிவித்துள்ளதாகவும்– எனினும் அவர்களி

நாவற்குழி--

(1ஆம்பக்க தொடர்ச்சி)

பெற்றது.

இதேவேளை கைதடி வழியாக வந்த சில வாகனங்கள்மீது ஹெலிகொப்டரிலிருந்து தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இதனையடுத்து கண்டி வீதிக்கான போக்குவரத்து யாவும் புத்தூர் வழியாக நடைபெற்றன.

குண்டு---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தக்கது

இவ்வாறு புதுக்காடு, இயக்கச்சி, பளை ஆகிய பகுதிகளில் அடிக்கடி பொம்மர்களும், ஹெலிகொப்டர்களும் சுற்றித் திரிந்து நோட்டம் பார்ப்பதும், அடிக்கடி தாக்குதல் நடத்துவதும் இப்பகுதி மக்களிடையே பெரும் பீதியை உண்டு பண்ணியுள்ளது (உ–76)

இனப்பிரச் ...

(1–ம்பக்கத் தொடர்ச்சி)

துப் பரிசோதனை செய்ய அரசுக்கு அதிகாரம் வழங்கும் சட்டமூலம்.

இதேவேளை--

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் தூதுக் கோஷ்டி ஒன்று இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை நேரிற் சந்தித்து இலங்கை இனப் பிரச்சினை சம்பந்தமாக பேச்சு நடத்த உள்ளது.

இதுசம்பந்தமாக தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக தமிழ்நாடு முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் உறுதியளித்திருக்கிறார்.

விலக வேண்டும்

இயற்றுக்கிடையில்–

இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா மத்தியஸ்தம் வகிக்காது விலகிக் கொள்ள வேண்டும் என்றும் –

அது குறித்து பிரதமர் ராஜீவ் பகிரங்கமாக அறிவிக்கவேண்டும் என்றும்– திராவிடர் கழகத் தலைவர் திரு கி. வீரமணியும் தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. ப. நெடுமாறனும்நேற்று மதுரையில் தெரிவித்தனர்.

தமிழ் போராளிகள் சரணடையும் வரை பொருளாதார முற்றுகையை அகற்றவோ அல்லது ராணுவ நடவடிக்கையை நிக்கவோ முடியாதென ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா வெளிப்படையாகவே கூறியுள்ளார். இதனால் பிரதமர் ராஜீவ் காந்தி தெளிவான முடிவை எடுக்க வேண்டிய அவசியம் உருவாகியுள்ளது.

முன்னதாக இந்தியாவின் நிபந்தனைகளை ஏற்று மீண்டும்பேச்சுவார்த்தை நடத்த ஒப்புக்கொண்ட இலங்கை அரசு இப்பொழுது அதிருப்திக்குள்ளாகியுள்ளதாகத் தெரிகிறது.

எனவே இந்தியா தொடர்ந்தும் மத்தியஸ்தம் வகிக்காமல் விலகிக் கொள்வதே புத்திசாலித்தனமானதாகும்.

இவ்வாறு அவர்கள் மேலும் தெரிவித்தனர். (அ-ஒ-எ)

மண்ணெண்ணை..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட விவசாயிகள் வாராந்தம் 2 லீற்றர் மண்ணெண்ணையை தத்தமது பகுதிகளிலுள்ள பல நோக்கு கூட்டுறவுச் சங்க நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

ஜெய்ப்பூர் டெஸ்ட்:

இந்தியாஸ்திரநிலையில் 8 விக்கெட்டுக்கு 459

அஸாருதீன்,சாஸ்திரி'செஞ்சுரி'

ஜெய்ப்பூர், பெப். 23

பாகிஸ்தானுக்கு எதிரான ஜெய்ப்பூர் டெஸ்டில் இந்திய அணி இரண்டாவது நாள் ஆட்ட முடிவில் 8 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 459 ஓட்டங்களைப்பெற்று விஜிரநிலையில் உள்ளது.

அஸாருதீன் 110 ஓட்டங்களும் ரவிசாஸ்திரி 125 ஓட்டங்களும் எடுத்தனர்.

அஸாருதீன் செஞ்சுரி அடித்தபோது பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஸியா–உல்–ஹக் கைதட்டி மகிழ்ச்சி தெரிவித்தார்.

இன்று (திங்கள்) ஆட்டத்தின் ஓய்வு நாள். (உ – எ)

சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், பெப். 23

இணுவில் கலை, ஒளி மன்றம் கரப்பந்தாட்டக் சுற்றுப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

இதில் கலந்துகொள்ளும் விளையாட்டு அணிகள் தங்கள் விண்ணப்பங்களை இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (இ-எ)

பலாலி ஷெல் ஏழாலையில் விழுந்தது

யாழ்ப்பாணம், பெப். 23

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்றுக்காலை ஏவப்பட்ட ஷெல்குண்டுஒன்று மூன்று வீடுகளையும் தாண்டி ஏழாலைப் பகுதியில் விழுந்து வெடித்தது.

எனினும்பாரிய சேதம் ஏதும் ஏற்படவில்லை. (உ–10)

வாய்ப்பு ஒன்று உருவாகி வருவதாகவும் சொல்லப்படுகிறது. (அ–உ–10)

கரபந்தாட்ட சுற்றுப்போட்டி

உடுப்பிட்டி, பெப். 23

கரவெட்டி கிழக்கு தெடுத்தலை யாழ்க்கடு சனசமூக நிலையம் சரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றை இம் மாதம் 26ஆம் திகதி நடத்தவுள்ளது.

அமரர் சு ஐயாத்துரை அவர்களின் ஞாபகார்த்தமாக ஒரு நாள் ஓவர் போட்டியாக இக்கரபந்தாட்டப் போட்டி நடத்தப்படவுள்ளது. (இ-157)

மக்கார் பட்டியல்

சமய – கலை அன்பன் வேலுப்பிள்ளை - கலைச்செல்வன் (செல்வன்)

வண்ணார்பண்ணை கோவில் பிள்ளையார் கோவிலடி கிருஷ்ணபிள்ளை – இந்திராணி (வேலுப்பிள்ளை – திரவியம்) ஆகியோரின் மூத்தபுதல்வனும், கலையழகன், கலைச்செல்வி, கலையழகி, கலையமுதா ஆகியோரின் அன்புச் சகோதரனும், பெரியபுலம் வித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரும், B.Com வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவனும், சிறந்த நடனக் கலைஞனும் சிவத் தொண்டனுமாவார். சமூக கிரியைகள் அன்னாரின் இல்லத்தில், இன்று பிற்பகல் நடைபெற்று பூதவுடல் 4. 00 மணிக்கு தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:— பெற்றோர்

ஆண்களின் தேவைகளை நிறைவேற்றுகிறது
ரிஷி அஜமாமிச லேகியம்
"முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது"
அதன் பயன்கள்



இல்வாழ்க்கையில் சிறந்த இன்பம் பெறவும் இழந்த சக்தியை மீட்டுக் கொடுப்பதுடன், எல்லா நரம்புகளையும் முறுக்கேற்றி விரைவிருத்தியை கொடுக்க வல்லது நளர்ச்சி, சோர்வு, களைப்பு, சிறுபிராயத்தில் அறியாமல் செய்த கெட்ட செய்கையாலும், வாலிப பருவத்தில் மிதமிறிய நாம்பத்தியத்தாலும், வயதான காலத்தில் உடல் சக்தியையும், ஆண் தன்மையையும், இரத்தம் குறைந்துமனச் சோர்வடைந்துஇருப்பவர்களையும் ரிஷி அஜிமாமிச லேகியம் சாப்பிடுவதினால் புது சக்தியைப் பெற்று, இல்லற வாழ்க்கையில் சந்தோஷமாக இருப்பதற்கு சிறந்த காயகல்ப மருந்து. சக்தியையும் உற்சாகத்தையும், ஊக்கத்தையும் தருகிறது.

250 கிராம்: ரூ 60/- 500 கிராம்; ரூ 110/-
தபால் செலவு ரூபா 10/-

Dr.T.D.மதுரநாயகம், D. A. M. (Cey.) M. Ac F (Cey)
ஞானசுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு, கொழும்பு-11.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் உதயபானுதாராரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 23 – 02 – 1987 தொலைபேசி இல. 21805 22075

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office. Under Number QJ / 94 / N/ 87. Telephone. 21805, 22075

விளையாட்டு ரசிகர்களே! பரிசுகளை வெல்லுங்கள்!!

வடக்கின்

1987 ஆம் ஆண்டின் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை

★ நீங்களே தேர்ந்தெடுங்கள்!!! ★

உதயன்

நிறுவனத்தின் ஆதரவோடு

யாழ். ஜோலிஸ்டார்ஸ் னியன்ஸ் விளையாட்டுக் கழகங்கள்

இணைந்து நடத்தும்

மிகப் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் வாக்களிப்பில் பங்குபற்றி உங்கள் அபிமான வீரரைத் தேர்ந்தெடுப்பதோடு அதிஷ்டப் பரிசில்களையும் வெல்லுங்கள் !!

நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:

(1) நாளை முதல் மார்ச் மாத இறுதிவரை உதயன் – சஞ்சீவி பத்திரிகைகளில் பிரசுரமாகும் கூப்பன்களில் வடக்கின் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரராக நீங்கள் கருதும் ஆட்டக்காரரின் பெயரை நிரப்பி அவர்களுக்கு உங்கள் வாக்கை அளியுங்கள்.

(2) வாக்குக் கூப்பன்கள் அனைத்தையும் நேரடியாக உதயன் பணிமனைக்கு "கிரிக்கெட் வீரர் தெரிவு, மே/பா. உதயன், தபால் பெட்டி இல. 23. யாழ்ப்பாணம்" என்று விலாசமிட்டு அனுப்பி வையுங்கள் அல்லது – இதற்கென உங்கள் பகுதிகளில் குறிப்பிடப்படும் இடங்களில் வைக்கப்படும் வாக்குப் பெட்டிகளில் உங்கள் கூப்பன்களை இடலாம்.

போட்டி விதிகள்:

(1) நீங்கள் தெரிவு செய்யும் வீரர் 19 வயதுக்கு உட்பட்ட பாடசாலை வீரராக இருக்க வேண்டும்.
(2) உதயன் / சஞ்சீவி பத்திரிகைகளில் வெளியாகும் கூப்பன்கள் மூலம் அளிக்கப்படும் வாக்குகள் மட்டுமே செல்லுபடியாகும்.
(3) சரியான முறையில் நிரப்பப்படாத கூப்பன்கள் நிராகரிக்கப்படும்.
(4) நீங்கள் தெரிவு செய்யும் வீரரின் முழுப் பெயரையும் கூப்பனில் எழுதுவது வரவேற்கத்தக்கது.
(5) ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் அதுவரை அளிக்கப்பட்ட வாக்குகள் எண்ணப்படும். வாக்கு எண்ணிக்கை விவரம் பிரதி செவ்வாய்க்கிழமை தோறும் உதயனில் பிரசுரமாகும்.
ஒவ்வொரு வாரமும் முன்னணியில் இருக்கும் வீரருக்கு அந்த வாரத்தில் வாக்களித்த இரு அதிஷ்டசாலிகளுக்கு தலா 50 ரூபா பரிசு வழங்கப்படும்.
(6) போட்டி சம்பந்தப்பட்ட விடயங்களில் போட்டிக் குழுவின் தீர்ப்பே இறுதியானதும் முடிவானதுமாகும்.

★ வடக்கின் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரராகத் தெரிவு செய்யப்படும் வீரர்களுக்கு பெறுமதிமிக்க பல பரிசுகள் வழங்கப்படும்.

★ கூப்பன்களை இடுவதற்கான வாக்குப் பெட்டிகள் வைக்கப்படும் இடங்கள் பற்றிய விவரம் நாளைய உதயனில் அறிவிக்கப்படும்.

கிரிக்கெட் போட்டிக்குழு - 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org